**செய்தி வெளியீடு எண்: 696** **நாள்:22.11.2012**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (22.11.2012) தலைமைச் செயலகத்தில், 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்படவுள்ள தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திற்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், 5 புதிய வருவாய் வட்டங்களை தோற்றுவித்து, 1 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

மாவட்டங்களில் நிருவாகம் செம்மையாக நடைபெற மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணிபுரிவதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்த அரசு கட்டடங்கள் ஒரே வளாகத்தில் அமைவது மிகவும் இன்றியமையாதது ஆகும். தஞ்சாவூர் மாவட்டம் மிகப் பழமை வாய்ந்த மாவட்டமானாலும், அரசு அலுவலகங்கள் நகரின் பல்வேறு இடங்களில் தனித்தனியே இயங்கி வந்தன. இதனைக் கருத்தில் கொண்டும், அரசு நிருவாக நலன் மற்றும் பொதுமக்களின் நலன் கருதியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தஞ்சாவூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தை ஏற்படுத்திட 43 கோடி ரூபாய் நிதி ஒப்புதல் வழங்கினார்கள். அதன்படி, 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்படவுள்ள தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

பொது மக்கள் காலவிரையத்தினைத் தவிர்த்து, எளிதில் வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், நிருவாக நலன் கருதியும், மக்கள் தொகை அடிப்படையில், வட்டங்களைப் பிரிப்பதன் மூலம் நிருவாகத்தினை மேம்படுத்திட இயலும் என்கிற நோக்கத்தின் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் புதிய வட்டங்கள் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர் மாவட்டம் – கிணத்துக்கடவு வட்டம் மற்றும் அன்னூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் – திருப்போரூர் வட்டம், ஈரோடு மாவட்டம் – அந்தியூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம் – ஆலத்தூர் வட்டம் ஆகிய ஐந்து புதிய வட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்தார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டம் – கிணத்துக்கடவு புதிய வட்டத்தை உருவாக்கிட, பல்வேறு நிலைகளில் 19 பணியிடங்கள் தவிர, புதிய அலுவலக வளாகம், குடியிருப்பு மற்றும் இதர தளவாடங்கள் உள்ளிட்ட செலவினங்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 2 கோடியே 41 லட்சத்து 63 ஆயிரத்து 300 ரூபாய்க்கு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்டது. பொள்ளாச்சி வட்டம் ஒரு மிகப் பெரிய பரப்பளவைக் கொண்ட வட்டமாகும். மக்கள் தொகை, நிலவரி வசூல், நில அளவைப் புலங்கள் மற்றும் தேர்தல் பணி ஆகியவற்றினை கருத்தில் கொண்டும், நிருவாக நலன் மற்றும் பொதுமக்களின் தேவைகளை காலதாமதம் இல்லாமல் விரைவாக பூர்த்தி செய்வதற்கு ஏதுவாகவும், பொள்ளாச்சி வட்டத்தினை பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு என இரண்டு வட்டங்களாகப் பிரித்து, பொள்ளாச்சி வட்டத்தில் தற்போதுள்ள 11 உள்வட்டங்களிலிருந்து 9 கிராமங்களை உள்ளடக்கிய வடசித்தூர் உள்வட்டம், 12 கிராமங்களை உள்ளடக்கிய கிணத்துக்கடவு உள்வட்டம் மற்றும் 14 கிராமங்களை உள்ளடக்கிய கோவில்பாளையம் உள்வட்டம் ஆகியவற்றை பிரித்து புதிய கிணத்துக்கடவு வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 299 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட கிணத்துக்கடவு வட்டத்தில் 35 கிராமங்களைச் சார்ந்த ஒரு லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டம் – அன்னூர் புதிய வட்டத்தை உருவாக்கிட, பல்வேறு நிலைகளில் 26 பணியிடங்கள் தவிர, புதிய அலுவலக வளாகம், குடியிருப்பு மற்றும் இதர தளவாடங்கள் உள்ளிட்ட செலவினங்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 2 கோடியே 41 லட்சத்து 63 ஆயிரத்து 300 ரூபாய்க்கு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்டது. நிருவாக நலன் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி அன்னூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட 22 வருவாய் கிராமங்களுடன், சர்க்கார்சாமக்குளம் ஒன்றித்துக்குட்பட்ட எட்டு வருவாய் கிராமங்களைச் சேர்த்து ஆக மொத்தம் 30 வருவாய் கிராமங்கள் அடங்கிய புதிய அன்னூர் வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 389 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட அன்னூர் வட்டத்தில் 30 கிராமங்களைச் சார்ந்த 1 லட்சத்து 74 ஆயிரம் மக்கள் பயன்பெறுவார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம் – திருப்போரூர் புதிய வட்டத்தை உருவாக்கிட, பல்வேறு நிலைகளில் 53 பணியிடங்கள் தவிர, புதிய அலுவலக வளாகம், குடியிருப்பு மற்றும் இதர தளவாடங்கள் உள்ளிட்ட செலவினங்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 2 கோடியே 41 லட்சத்து 63 ஆயிரத்து 300 ரூபாய்க்கு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்டது. நிருவாக நலன் மற்றும் பொதுமக்கள் நலனைக் கருதி தற்போதுள்ள செங்கல்பட்டு வட்டம் இரு வட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. திருப்போரூர், கேளம்பாக்கம், கரும்பாக்கம், மானாமதி, நெல்லிக்குப்பம், மாம்பாக்கம் மற்றும் பையனூர் ஆகிய உள்வட்டங்களை உள்ளடக்கிய புதிய திருப்போரூர் வட்டம் உருவாக்கப்படுகிறது. இதனால் ஏறத்தாழ 423 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட திருப்போரூர் வட்டத்தின் 96 கிராமங்களைச் சார்ந்த 1 லட்சத்து 72 ஆயிரம் மக்கள் பயன்பெறுவார்கள். மேலும், பட்டா மற்றும் சான்றிதழ்கள் பெற 2 அல்லது 3 மணி நேரம் பயணம் செய்யும் நிலை முற்றிலுமாக குறையும்.

ஈரோடு மாவட்டம் – அந்தியூர் புதிய வட்டத்தை உருவாக்கிட, பல்வேறு நிலைகளில் 51 பணியிடங்கள் தவிர, புதிய அலுவலக வளாகம், குடியிருப்பு மற்றும் இதர தளவாடங்கள் உள்ளிட்ட செலவினங்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 2 கோடியே 41 லட்சத்து 53 ஆயிரத்து 300 ரூபாய்க்கு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்டது. ஈரோடு மாவட்டம், தற்போதைய பவானி மற்றும் கோபிச் செட்டிப்பாளையம் ஆகிய வட்டங்களை சீரமைத்து அந்தியூர், அத்தாணி, பாகூர் மற்றும் அம்மாப்பேட்டை ஆகிய 4 குறுவட்டங்களை உள்ளடக்கிய புதிய அந்தியூர் வட்டம் உருவாக்கப்படுகிறது. ஏறத்தாழ 406 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட இப்புதிய வட்டத்தில் 30 வருவாய் கிராமங்களைச் சார்ந்த சுமார் 2 லட்சத்து 25 ஆயிரம் மக்கள் பயன் பெறுவார்கள்.

பெரம்பலூர் மாவட்டம் – ஆலத்தூர் புதிய வட்டத்தை உருவாக்கிட, பல்வேறு நிலைகளில் 27 பணியிடங்கள் தவிர, புதிய அலுவலக வளாகம், குடியிருப்பு மற்றும் இதர தளவாடங்கள் உள்ளிட்ட செலவினங்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 2 கோடியே 41 லட்சத்து 53 ஆயிரத்து 300 ரூபாய்க்கு ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி குன்னம் வட்டத்தில் உள்ள செட்டிகுளம் மற்றும் கொளக்காநத்தம் ஆகிய 2 குறுவட்டங்களை சீரமைத்து, கூத்தூர் என்ற புதிய குறுவட்டத்துடன் ஆலத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. 408 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட இப்புதிய வட்டம் உருவாக்கப்படுவதன் மூலம் 39 வருவாய் கிராமங்களைச் சார்ந்த 1 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் பயனடைவார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தில், 1244 சதுர மீட்டர் பரப்பளவில், 1 கோடியே 43 லட்சம் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், மாவட்டங்களுக்கு பணிநிமித்தம் வருகை புரியும் முக்கிய பிரமுகர்களின் பயன்பாட்டிற்காக 31 மாவட்டங்களுக்கு 8 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 68 புதிய இன்னோவா வாகனங்களை வருவாய் துறையினருக்கு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், வருவாய்த்துறை முதன்மைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர் (பொறுப்பு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 22.11.2012